34. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் திணைகளும்.

153. மீனவர் மேம்பாட்டு முகவரமைப்பு மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகவரமைப்புக்குச் சொந்தமான வண்டிக்குச் செலுத்த வேண்டிய வரிவிதிப்பிலிருந்து விலக் களிப்பது குறித்து 17—12—1981-ஆம் தேதியிடப்பெற்ற உள் (போக்கு வரத்து-1) துறையின் 2998-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

154. 1978—79 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

153. கோரிக்கை எண் 26—கைத்தறி மற்றும் பஞ்சாலை ஆகியவற்றின் கொள்கையும் திட்டங்களும் பற்றிய குறிப்பு, 1982—83 (தமிழ், ஆங்கிலம்).

154. 1982—83 ஆம் ஆண்டு கைத்தறி துணி நூல் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

155. கோரிக்கை எண் 22—கால்நடைப் பராமரிப்புப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1982—83 (தமிழ், ஆங்கிலம்).

156. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல் வினை முறைத் திட்டம், 1982—83 (தமிழ், ஆங்கிலம்).

157. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான பணிகள் பற்றிய அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

158. தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு, 1981—82 (தமிழ், ஆங்கிலம்).

159. கோரிக்கை எண் 43—பல்வகை—கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்த இந்திய அகதிகளுக்கும் குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும் புதுவாழ்வும் (தமிழ், ஆங்கிலம்).

160. கோரிக்கை எண் 43—சிறு சேமிப்புத் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

161. மறுவாழ்வுத் துறையின் 1982—83 ஆம் ஆண்டிற்கான சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

162. கோரிக்கை எண் 55—பல்வகை—மூலதனச் செலவு பற்றிய கொள்கை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்),